ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2416/04 - 2024 දෙසැම්බර් මස 24 වැනි අඟහරුවාදා - 2024.12.24

2416/04 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டம்**
**(அத்தியாயம் 420)**

அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (2) ஆவது பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) பிரிவு 2, பிரிவு 5 மற்றும் பிரிவு 21இ உடன் வாசிக்கப்படும் பிரிவு 55 இன் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**அநுர குமார திசாநாயக்க,**
சனாதிபதி.

கொழும்பு,
2024, திசெம்பர் 24.

2024, ஒகத்து 21 ஆந் திகதி நடைபெற்ற MF/PE/017/CM/2024/222 ஆம் இலக்க அமைச்சரவைக் கூட்டத்தில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2022.12.31 இன் படி மாற்றப்பட்ட கடன் மீதியின் சார்பாக இலங்கை ரூபா கடன் தீர்வு திகதியில், தற்போதைய கடன் வசதியின் கீழ் நிலுவையிலுள்ள இலங்கை ரூபா மூலதனத் தொகை மற்றும் செலுத்த வேண்டிய வட்டிக்கு முந்தைய இலங்கை ரூபா மூலதனம் உட்பட 2026, 2028, 2030, 2032 மற்றும் 2034 ஆண்டுகளில் மக்கள் வங்கிக்கு மொத்தம் ரூபா 262,582,862,854.00 முதிர்ச்சியடையும் 5 புதிய திறைசேரி முறி சாதனங்களை வெளியிடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

1937 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2, பிரிவு 5 மற்றும் பிரிவு 21இ உடன் வாசிக்கப்படும் பிரிவு 55 இன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், இதன் மூலம் பின்வருமாறு ஒழுங்குவிதிகளை ஆக்குகின்றேன்.

1A - G 43392 — 07 (2024/12)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஒழுங்குவிதிகள்**

1. இந்த ஒழுங்குவிதிகள் "2024 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடன்களை மறுசீரமைப்பதில் இலங்கை ரூபா மதிப்பிலான பிணையங்களை வழங்குவதன் மூலம் இலங்கை ரூபா கடன் தீர்வை நடைமுறைப்படுத்துதல் இலங்கை அரசாங்கத்தின் ஐந்தொகைக்கு மாற்றப்பட்டது) ஒழுங்குவிதிகள், என எடுத்துக் காட்டப்படலாம்.

2. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் பொது படுகடன் பதிவாளர் ஆகியோருக்கு நான் இதன்மூலம் பிரகடனம் செய்து பின்வருவனவற்றுக்காக அங்கீகாரம் வழங்குகிறேன்:-

2.1 "இலங்கை அரசாங்கத்தின் ஐந்தொகைக்கு மாற்றப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடன்களை மறுசீரமைத்தல்" என்ற 2024 ஓகத்து 21 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள MF/LA/022/CM/2024/090 ஆம் இலக்க அமைச்சரவை இனால் அங்கீகரிக்கப்பட்ட (இனி "இலங்கை ரூபா கடன் தீர்வை" என குறிப்பிடப்படுகிறது) இலங்கை ரூபா கடன் தீர்வையினைச் செயற்படுத்தல்.

2.2 மேலே உள்ள ஒழுங்குவிதி 2.1 இன் கீழ் அறிவிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை ரூபா கடன் தீர்வையினை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்குத் தேவையான திறைசேரி முறிகளின் ஒரு தொகையை உருவாக்கி, கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடுதல், மற்றும்

2.3 இந்த கட்டளைச் சட்டம் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் விதிகளின் கீழ் சந்தை அல்லாத பொறிமுறைகள் மூலம் உள்நாட்டு சந்தையில் திறைசேரி முறிகளை உருவாக்கி வெளியிடுதல்.

3. இலங்கை ரூபா கடன் தீர்வை, வைத்திருப்பவர்களின் வகை, வைத்திருப்பவர் துல்லியமான விவரங்கள், வட்டி செலுத்தும் விதம், பிற செலுத்த வேண்டிய விதிமுறைகள் மற்றும் அத்தகைய கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படக்கூடிய நிபந்தனைகள் செயற்படுத்தும் போது வழங்கப்பட வேண்டும் என்பதற்பாக, புதிய திறைசேரி முறிகளின் விளக்கத்தை பொதுக் கடன் பதிவாளருக்குக் குறிப்பிட நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு நான் இதன் மூலம் அங்கீகாரம் வழங்குகிறேன்.

4. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரால் குறிப்பிடப்பட்ட அத்தகைய வைத்திருப்பவர்களுக்கு, மேலே உள்ள ஒழுங்குவிதி 2 மற்றும் ஒழுங்குவிதி 3 இன் கீழ், தொடர்புடைய நிதி தீர்வுகள் இல்லாமல் கட்டளைச்சட்டத்தின் கீழ் திறைசேரி முறிகளை உருவாக்குவதற்கும் வெளியிடுவதற்கும் பொதுக் கடன் பதிவாளருக்கு நான் இதன் மூலம் மேலதிகமாக அங்கீகாரம் வழங்குகிறேன்.

5. மேற்கூறிய உள்ளூர் விருப்பத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பாக லங்கா செக்யூர் சிஸ்டத்தின் மத்திய வைப்புத்தொகை அமைப்பிலோ அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய நிறுவனத்திலோ, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கணக்குகளைத் திறக்க, பராமரிக்க, மாற்றங்களைச் செயல்படுத்த மற்றும் மூடுவதற்கு பொதுக் கடன் பதிவாளருக்கு நான் இதன் மூலம் அங்கீகாரம் அளிக்கிறேன்.

EOG 12-0303

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.